IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.

DEPOSITION OF WITNESS

OS.NO.12/2019
P.W.1-NETHAJI
DATE:11.01.2021

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி.**

**நான் எதற்காக இந்த வழக்கினை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் என் அம்மாவின் சொத்தினை என் தங்கை ஏமாற்றி பெற்றுக்கொண்டார் என்பதால் நான் இந்த வழக்கினை தாக்கல் செய்தேன். நான் தான் இந்த வழக்கினை தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் என் தாயார் கூறி தாக்கல் செய்திருக்கிறேன். என் தாயார் வாய்மொழியாக வழக்கினை தாக்கல் செய்யச் சொல்லி கூறினாரா என்றால் ஆமாம். என் தாயார் வழக்கினை தாக்கல் செய்ய சொல்லி எழுத்து மூலமாக ஏதேனும் எழுதிக்கொடுத்தாரா என்றால் இல்லை. என் தாயார் மனநிலை பாதிக்கப்பட்டுள்ளாரா என்றால் அவர் சுய புத்தியாக இல்லை. சுய புத்தியமாக இல்லை என்று கூறுகிறீர்களே அப்படி என்றால் என்ன என்றால் அவருக்கு சில நேரங்களில் சுய புத்தியாக இல்லை. அப்படியாயின் அவர் மனநிலை சரியில்லாமல் இருக்கிறாரா என்றால் 80 சதவிகிதம் அப்படி இருக்கிறார். என் தாயார் 80 சதவிகிதம் மனநிலை சரியில்லாமல் எவ்வளவு நாட்களாக இருக்கிறார் என்றால் சரியாக ஞாபகமில்லை. இப்பவும் 80 சதவிகிதம் மனநிலை சரியில்லாமல் இருக்கிறாரா என்றால் தெரியாது. என் தாயாரை ஒரு நாளைக்கு முன்னால் பார்த்தேன். என் தாயாருக்கு 80 சதவிகிதம் மனநிலை சரியில்லை என்று என்னுடைய வழக்குரையிலும் முதல் விசாரணையிலும் சொல்லியிருக்கிறேனா என்றால் இல்லை. என் தகப்பனார் இருக்கிறார். இன்று நீதிமன்றத்திற்கு வந்திருக்கிறார். இந்த வழக்கினை தாக்கல் செய்தது என் தகப்பனார் தானா என்றால் என் தாய் தகப்பனார் சொல்லி நான் தாக்கல் செய்திருக்கிறார். 80 சதவிகிதம் மனநிலை சரியல்லாதவருக்கு வழக்காட வேண்டுமென்றால் பாதுகாவலர் மனு தாக்கல் செய்து அது**

அனுமதிக்கப்பட்டு வழக்கினை தாக்கல் செய்திருந்திருக்க வேண்டும் என்றால் சரியல்ல. இந்த காரணத்திற்காகவே இந்த வழக்கு தள்ளுபடிக்கு உகந்தது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் முகவர் அதிகாரம் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் தாக்கல் செய்திருக்கிறேன். முகவர் அதிகார பத்திரமானது 2019ல் எழுதப்பட்டது, தேதி தெரியுமா என்றால் சரியாக ஞாபகமில்லை. முகவர் அதிகார பத்திரத்தினை என் தகப்பனார் தயார் செய்து எடுத்துவந்தார். அதை யார் எழுதினார்கள், எங்கு எழுதினார்கனள் என்று என் தகப்பனார் சொன்னார், எனக்கு ஞாபகமில்லை. இந்த முகவர் அதிகார பத்திரம் எழுதப்பட்டது குறித்து எனக்கு நேரடிட்டு தெரியாது என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கிற்காக வேண்டி இந்த முகவர் அதிகார பத்திரமானது தயார் செய்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது, என் தாயாருக்கு அதை பற்றி எதுவும் தெரியாது என்று சொன்னால் எனக்கு ஞாபகத்திற்கு வரவில்லை. என் சகோதரியின் மீது இந்த வழக்கினை தாக்கல் செய்திருக்கிறேன். என் தகப்பனார் பெயர் பக்தவச்சலம். என்னுடன் சகோதரர்கள் என்னையும் சேர்த்து மூவர், ஒரு தங்கை. என் வீட்டில் நான் தான் மூத்தவர், மற்ற இருவரும் இளைய சகோதரர்கள். ஒரு சகோதரர் பெயர் பிரசாத், மற்றொரு சகோதரர் பெயர் விஷ்ணுகுமார். இந்த வழக்கினை என் தாயார் தாக்கல் செய்யவில்லை என்னையும் தாக்கல் செய்ய சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. என் தந்தையின் தூண்டுதலின் பேரில் நான் இந்த வழக்கினை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. வாதிக்காக இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க எனக்கு அருகதை இல்லை என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய வாக்குமூலம் பரிசீலைக்குரியது அல்ல என்று சொன்னால் சரியல்ல. என் தகப்பனார் ஒரு ஆசிரியர் என்றால் சரிதான். என் மனைவியும் ஒரு அரசாங்க ஆசிரியை என்றால் சரிதான். என் மனைவியும் என் தகப்பனாரும் ஒரே பள்ளியில் வேலை பார்த்தார்கள் என்றால் சரிதான். என் மனைவி என்னை விட 6 வயது மூத்தவர் என்றால் எனக்கு ஞாபகமில்லை. என் தகப்பனார் என்னுடன் தான் இருக்கிறாரா என்றால் என் தகப்பனார் கிராமத்தில் இருக்கிறார், நான் லத்தேரியில் வசிக்கிறேன். என் மனைவி ஏற்கனவே திருமணம் ஆனவரா என்றால் எனக்கு அதற்கு பதில் அளிக்க விருப்பம் இல்லை. நான், என் தகப்பனார், என் மனைவி

ஒரே வீட்டில் தான் குடியிருக்கிறோம் என்றால் இல்லை.

குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.